**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 30/2023 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாஸ்கரன் | த–பெ<br>க.பெ. | கோவிந்த சாமி |
| ஊர்: | : | சென்னை | சமயம்: | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தொழில் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026**

--------------------------------------------------------------------------------------------------

**16.04.2026**
**முதல் விசாரணை**

**1) நான் சென்னையில் வசித்து வருகிறேன். எதிரியை கடந்த 2022–2023ல் என் அக்கா கணவர் மூலம் தெரியும். நான் சீனிவாச இஞ்சினியரிங் என்ற பெயரில் கம்பெனி வைத்திருந்தேன். மேற்படி கம்பெனியை 2023ல் வருடத்தில் நிறுத்திவிட்டேன். எதிரி என் கம்பெனிக்கு வருவார் எனது அறையில் உட்காருவார் அதன் மூலம் பழக்கம். நான் கம்பெனி மூலம் 10 முதல் 15 அறக்கட்டளைக்கு தொண்டு உதவி செய்வேன். மாதம் ரூ.1000/– காசோலை மூலமாக ஒவ்வொரு அறக்கட்டளைக்கும், ஒவ்வொரு மாதமும் தருவேன். காசோலையை நான் நேரடியாக கொடுப்பதில்லை யார் சென்றாலும் அவர்கள் மூலம் கொடுத்தனுப்புவேன். மேற்படி காசோலைகளை கையொப்பம் மட்டும் செய்து வைத்திருப்பேன். அதிக தொகை நிரப்பி இருந்தால் அதை நான் எனது போனில் படம் எடுத்து வைத்துக்கொள்வேன். எதிரி மூலமாகவும் அறக்கட்டளைகளுக்கு கையொப்பம் மட்டும் செய்து காசோலைகளை கொடுத்துள்ளேன். அப்போது புகார்தாரருக்கு உடல் நிலை சரியில்லாததால் அவரையும் எனது கம்பெனியில் பங்குதாரராக சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டார். அதை நான் மறுத்துவிட்டதால் அவருக்கும் எனக்கும் சிறிது மனஸ்தாபம் ஏற்பட்டது. எனக்கு**

பணம் தேவைப்படும் காலக்கட்டங்களில் அவரிடம் பணம் ரூ. 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை கேட்டுள்ளேன். அவரும் கொடுத்துள்ளார். அதை நான் திருப்பி கொடுத்துவிட்டேன்.

2) வழக்கு காசோலையையும் நான் கையொப்பம் செய்து எனது கம்பெனியில் உள்ள எனது அறையில் வைத்திருந்தேன். அதை புகார்தாரர் எனக்கு தெரியாமல் எடுத்து சென்று விட்டார். எனக்கும் புகார்தாரருக்கும் இடையேயான வரவு செலவு கணக்கு உள்ளது அதை நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

( ஆவணம் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.16 18:26:08 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)